# இறை நன்றி

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ

وَاِنْ مِنْ شَيْءٍ اِلاَّ يُسَبِّحُ بِحَمْدِهِ [i]

அற்புதமிக்க புனித அல்குர்ஆன் தொடர்ந்தேர்ச்சையாக..

اَفَلاَ يَشْكُرُونَ * اَفَلاَ يَشْكُرُونَ * وَسَنَجْزِى الشَّاكِرِينَ * لَئِنْ شَكَرْتُمْ لاَزِيدَنَّكُمْ * بَلِ اللهَ فَاعْبُدْ وَكُنْ مِنَ الشَّاكِرِينَ [ii]

போன்ற வசனங்களை மீட்டுவதானது அல்ஹா(ட்)லிகுர் ரஹ்மான், தனது அடியார்களிடம் எதிர்பார்க்கும் மிக முக்கியமான பணி இறை நன்றியாகும் என்பதைக் காட்டி நிற்கின்றது. சர்வ ஞானம் பொருந்திய குர்ஆனில் மிக முக்கியத்துவம் கொடுத்து இறை நன்றிக்காக அழைப்பு விடுக்கிறான். மேலும், நன்றி செலுத்தாமையை, அருட்கொடைகளைப் பொய்ப்பித்தலாகவும் நிராகரித்தலாகவும் சித்திரித்து فَبِاَىِّ آلاَءِ رَبِّكُمَا تُكَذِّبَانِ என்ற வசனத்தை சூறதுர் ரஹ்மானில் மிகவும் கடுமையானதும் காரசாரமானதுமான தோரணையில் முப்பத்தியொரு தடவை மீட்டுவதனூடாக எச்சரிக்கை செய்கின்றான்; நன்றி செலுத்தாமையானது பொய்ப்பித்தலும் நிராகரித்தலும் ஆகும் என்பதை வலியுறுத்துகின்றான்.

ஆம்! சர்வ ஞானம் பொருந்திய குர்ஆன் இறை நன்றியை படைப்பின் நோக்கமாகவும் விளைவாகவும் காட்டுவது போன்றே, குர்ஆனுல் கபீர் ஆன இந்தப் பிரபஞ்ச வெளியும் கூட இறை நன்றியையே இப்பிரபஞ்சத்தின் படைப்பிலுள்ள நோக்கமாகவும் விளைவாகவும் காட்டுகின்றது. ஏனெனில், பிரபஞ்சத்தை நோக்கி எமது அவதானத்தைச் செலுத்தினால், பிரபஞ்சத்தின் கட்டமைப்பில் ஒவ்வொரு தனித்தனிப் பொருளும் நன்றியை விளைவாகத் தரக் கூடிய அமைப்பில், ஓரளவு நன்றியோடு தொடர்புபட்டு அதனை நோக்கி இருக்கின்றது என்பதைக் கண்டுகொள்ள முடியும். அதாவது, இந்தப் பிரபஞ்ச விருட்சத்தின் மிகச் சிறப்பு வாய்ந்த கனி நன்றியாகும். மேலும், இந்தப் பிரபஞ்சத் தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் அதி உன்னதமான உற்பத்தி நன்றியாகும். ஏனெனில், பிரபஞ்சத்தின் படைப்பில் நாம் காண்கின்ற விடயம் என்னவென்றால், பிரபஞ்சத்திலுள்ள படைப்புக்களானது ஒரு சக்கர வடிவில் கட்டமைக்கப்பட்டு, அதனுள் மையப் புள்ளியாக "ஹயாத்" அதாவது, வாழ்வு படைக்கப்பட்டுள்ளது. அனைத்துப் படைப்புக்களும் வாழ்வோடு பிணைக்கப்பட்டுள்ளன; அவை வாழ்வுக்காகச் சேவை செய்கின்றன; வாழ்வுக்குத் தேவையானவற்றை வழங்குகின்றன. அதாவது, பிரபஞ்சத்தைப் படைத்தவன் அதிலிருந்து அந்த வாழ்வை ஒரு நோக்கத்திற்காகத் தெரிவு செய்கின்றான் என்பது தெளிவாகின்றது.

மேலும், நாம் இனங்காணக்கூடிய அடுத்த விடயம், அல்லாஹ் உயிரின உலகங்களை ஒரு சக்கர வடிவில் படைத்து, அதன் மையப் புள்ளியில் மனிதனை நிர்ணயித்துள்ளான். ஏறக்குறைய உயிரினங்களிலிருந்து வேண்டப்படும் அனைத்து நோக்கங்களையும் அவனில் மையப்படுத்துகிறான்; அனைத்து உயிரினங்களையும் அவனைச் சூழ ஒன்று திரட்டி, அவனது சேவகனாக ஆக்கி, அவனது கட்டளைக்காக விட்டு, அவனை அவற்றின் மீது அதிகாரமிக்கவனாக ஆக்குகிறான். இதிலிருந்து, ஹா(ட்)லிகுல் ஜலால், உயிரினங்களுக்குள் இருந்து மனிதனைத் தெரிவு செய்கிறான்; பிரபஞ்சத்தில் தனது நாட்டத்திலும் தெரிவிலும் அவனை முற்படுத்துகின்றான் என்பது உறுதியாகின்றது.

அதன் பின்னர் இனங்காணக்கூடியதாக இருக்கின்ற அடுத்த விடயம், மனித உலகும் ஏன், ஜீவராசிகள் உலகும்கூட ஒரு சக்கர வடிவில் ஒழுங்கமைக்கப்பட்டு, மையப் புள்ளியில் 'ரிஸ்க்'

---

[i] இஸ்ரா.:- 44

[ii] முறையே: யாஸீன்-35, ஆலுஇம்ரான்-145, இப்ராஹீம்-07, அஸ்ஸுமர்-68

அதாவது, வாழ்வாதாரங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த மனித குலத்தையும், மிருகங்களையும் ஏறக்குறைய ரிஸ்க் மீது காதல் கொள்ளவைத்து, அவர்களை ஒட்டுமொத்தமாக ரிஸ்கிற்கான சேவகர்களாகவும், அதன் கட்டளைக்குக் கீழ்படிந்தவர்களாகவும் ஆக்கி வைத்துள்ளான். அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவது ரிஸ்க் ஆகும். அனைத்துக்கும் மேலாக ரிஸ்கை எல்லையற்ற அருள் பாக்கியங்கள் உள்ளடங்கலான விசாலமான செல்வம் கொழிக்கும் ஒரு கஜானாவாக அவன் ஆக்கி வைத்துள்ளான். மேலும், ரிஸ்கின் பல்வேறு வகைகளுள் தனி ஒரு வகையான ஆகாரங்களின் சுவைகளை அறிந்து கொள்வதற்காக, நாவிலுள்ள சுவையுணர்வில் ஆகாரங்கள் எண்ணிக்கையளவு உள்ளார்ந்த நுணுக்கமான அளவீடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் அர்த்தமானது, அதி வியத்தகு, அதி ஆச்சரியமிக்க, அதிக வளம் கொழிக்கும், அதி உள்ளடக்கமான சத்தியம் ரிஸ்க்கில் உள்ளது என்பதாகும்.

மேலும், இவ்விடயத்தில் நாம் காணக்கூடிய அடுத்த விடயம் என்னவென்றால், அனைத்து வஸ்துக்களும் ரிஸ்கைச் சூழ ஒன்று திரண்டு அதனோடு தொடர்பு பட்டுள்ளதைப் போன்றே ரிஸ்கும் கூட அதன் அத்தனை வகைகளும் உள்ளடங்கலாக, ஆன்மீக மற்றும் பௌதீக ரீதியாக, அக மற்றும் புற ரீதியாக நன்றியோடு பிணைந்ததாகும்; நன்றியின் வெளிப்பாடாகும்; நன்றியை விளைக்கின்றது; நன்றியைப் பிரதிபலிக்கின்றது. ஏனெனில், ரிஸ்க் மீதான தேவையும் பசியும் கூட ஒரு வகை நன்றியாகும். மேலும், சுவையும் இன்பமும் கூட தன் உணர்வற்ற ஒருவகை நன்றியாகும். ஆக, அனைத்து ஜீவராசிகளிடமும் இவ்வகை நன்றி காணப்படுகின்றது. ஆனால், மனிதனோ, வழிகேடு மற்றும் கு∴ப்ர் காரணமாக அந்த இயல்பான நன்றியின் தன்மையை மாற்றி விடுகின்றான். ஷுக்ரை விட்டு விட்டு ஷிர்கை நோக்கிச் செல்கின்றான். அதாவது, இறைவனுக்கான நன்றியை விட்டு விட்டு இறை நிராகரிப்பை நோக்கிச் செல்கின்றான்.

மேலும், ரிஸ்க் ஆக இருக்கின்ற அருளாகாரங்களில் இருக்கும் மிகவும் அழகிய, வனப்பான தோற்றங்கள், மிகவும் வசீகரமான வாசனைகள், மிகவும் இனிமையான சுவைகள் என்பன நன்றிக்கான அழைப்பாளர்களாகும். உயிரினங்களின் ஆர்வத்துக்கு அழைப்பு விடுத்து அந்த ஆர்வத்தினூடாக ஆகாரங்களின் மீது ஒருவகை நேசத்தையும் மதிப்பையும் ஏற்படுத்தும் ஓர் ஆன்ம நன்றியை மொழியச் செய்யும். அதாவது, ஜீவராசிகளின் பார்வைகளை கவனயீர்ப்புச் செய்து விருப்பம் கொள்ள ஊக்கமளிக்கும். இந்த அருட்கொடைகள் அவற்றின்மீது ஒரு மதிப்புணர்வை வளர்க்கும். அதன் மூலமாகச் சொல்லாலும் செயலாலும் இறைவனுக்கான நன்றியை நோக்கி அவற்றை நேர்வழிப்படுத்தி நன்றி மொழிய வைக்கும். அந்த நன்றியோடு, கூடவே அதி உன்னதமானதோர் இனிய இன்பத்தையும் அனுபவிக்கச் செய்யும். இன்னொரு வகையில் சொல்வதானால், இந்தச் சுவை மிக்க அருட்கொடைகள், ஆகாரங்களானது குறுகிய, தற்காலிகமான, தோற்றத்தளவிலான ஓர் இன்பத்துடன் கூடவே நிரந்தரமானதும் உண்மையானதும் எல்லையற்றதுமான இன்பங்களைக்கொண்ட ரஹ்மானுடைய நெருக்கத்தை நன்றியூடாகப் பெற்றுத் தரும். அதாவது, ரஹ்மத்துடைய கஜானாக்களின் இரட்சகனான அல்மாலிகுல் கரீமின் எல்லையில்லா இன்பங்கள் நிறைந்த நெருக்கத்தைப் பற்றிச் சிந்திக்கச் செய்து இந்த உலகிலும் கூட சுவனத்தின் நித்திய இன்பங்களை உள்ளார்ந்து அனுபவிக்கச் செய்யும். இவ்வாறு ரிஸ்க் ஆனது நன்றியின் வாயிலாக இப்படிப்பட்ட பெறுமதி வாய்ந்த, வளம்கொழிக்கும், உள்ளடக்கமான ஒரு கருவூலமாக இருக்கின்றபோது, நன்றியின்மை காரணமாக அதல பாதாளத்தை நோக்கித் தாழ்ந்து விடுகின்றது.

ரிஸாலே-இ நூர் தொகுப்பின் ஆறாவது வார்த்தையில் தெளிவுபடுத்தப்பட்டதைப் போன்று, நாவிலிருக்கும் சுவையுணர்வானது, அல்லாஹ்வுக்காக, அதாவது ஆத்மார்த்தமாக இறை நன்றி செலுத்தும் பணியோடு ரிஸ்கை நாடுகின்ற போது அந்த நாவிலிருக்கும் சுவை உணர்வானது இறை கருணையின் வெளிப்பாடான எண்ணற்ற சமையல் கூடங்களுக்கான நன்றியுள்ள பரிசோதகன் என்ற அந்தஸ்தையும் விசுவாசமான உயர்நிலைக் கண்காணிப்பாளன் என்ற அந்தஸ்தையும் அடைகின்றது. மாறாக இச்சைகளுக்காகவென்று ஆகும் போது, அதாவது ரிஸ்கை நாடும் போது, அதை அருள்பாலிப்பவனுக்கான நன்றியுணர்வை வெளிப்படுத்தாதபோது, அந்த நாவிலிருக்கும் சுவை உணர்வானது, உயர் நிலைக் கண்காணிப்பாளன் என்ற அந்தஸ்திலிருந்து வயிறு என்ற தொழிற்சாலையின் ஒரு வாயிற்காவலன் என்ற மட்டத்துக்குத் தாழ்ந்து விடும். இவ்வாறே அருட்கொடைகளின் தன்மையும் ரிஸ்கிற்கான சேவகர்களான பிற அங்க அவயங்களும் கூட அதி உன்னத அந்தஸ்திலிருந்து அதி தாழ்மட்டத்தை அடைகின்றன; பிரபஞ்சத்தின் படைப்பாளனுடைய சர்வ ஞானத்துக்கு முரணானதும் எதிரானதுமான ஒரு நிலையை அடைகின்றன.

இறை நன்றிக்கான அளவீடு: மனத்திருப்தி, சிக்கனம், மனமுவப்புடன் வருபவற்றைப் பொருந்திக்கொள்ளுதல் என்பனவாகும். நன்றியின்மைக்கான அளவீடானது: பேராசை, வீண்விரயம், மதிப்பளிக்காமை, ஹராம் ஹலால் பாராது கண்டதையெல்லாம் உண்ணுதல் என்பனவாகும்.

ஆம், பேராசையானது, நன்றியின்மையாக இருப்பது போன்றே இழப்புக்களுக்கும் இழிவுக்குமான காரணியாகவும் அமைகின்றது. உதாரணமாக, சமூக வாழ்வைப் பேணி வாழும் பரக்கத் பொருந்திய எறும்புகள், ஏதோ பேராசை காரணமாகத்தான் போலும், கால்களுக்குக் கீழ் மிதிபட்டு அவதிப்படுகின்றன. ஏனெனில், வருடத்துக்கு ஒரு சில அரிசி மணிகள் போதுமானதாக இருக்கும் போது, திருப்திப்படாது, வாய்ப்புக் கிடைக்குமெனில் ஆயிரக் கணக்கானதைச் சேமித்துக் கொள்ளும். அதே போன்று அருள்பாலிக்கப்பட்ட தேனியும் கூட, ஏதோ மனத் திருப்தி காரணமாகத்தான் போலும், ஆகாயத்தில் தலைகளுக்கு மேலால் பறக்கின்றன. அந்த மனத் திருப்தி காரணமாக இனிய தேனை இறை கட்டளைக்கிணங்க மனிதர்களுக்கு அருளி ஆகாரமாக ஊட்டுகின்றன.

ஆம்! சர்வலோக இரட்சகனின் மிகப் புனிதமானதும் அதி உன்னதமானதுமான நாமமான “அல்லாஹ்” எனும் நாமத்திற்கு அடுத்தபடியான அதி உன்னதமான நாமமான “ரஹ்மான்” என்ற நாமமானது ரிஸ்கோடு சம்பந்தப்பட்டதாகும். ரிஸ்கில் இருக்கும் ஷுக்ர் மூலமாக அந்த ரஹ்மானை அடைந்து கொள்ள முடியும். மேலும், ரஹ்மானுடைய மிகவும் வெளிப்படையான அர்த்தம் ரஸ்ஸாக் ஆகும்.

மேலும், நன்றிக்கான பல வழிகள் காணப்படுகின்றன. அவற்றுள் மிகவும் உள்ளடக்கமானதாகவும் ஒட்டுமொத்த நன்றிகளின் சாரமாகவும் தொழுகை இருக்கின்றது.

அத்துடன், இறை நன்றியினுள் கலப்படமற்றதொரு ஈமானும் தூய்மையான தவ்ஹீதும் பொதியப் பெற்றுள்ளன. ஏனெனில், ஒரு அப்பிள் பழத்தைச் சாப்பிட்டு விட்டு “அல்ஹம்துலில்லாஹ்” என்று மொழியும் மனிதன், அந்த ஹம்த் மூலமாக, “அந்த அப்பிள் பழமானது நேரடியாக எந்தவிதத் திரையுமற்ற இறை வல்லமையின் அத்தாட்சியும், ரஹ்மத் கஜானாவின் அன்பளிப்புமாகும்” என்பதைப் பிரகடனப் படுத்தி, விசுவாசம் கொள்கிறான். சிறிதாக இருக்கட்டும் பெரிதாக இருக்கட்டும், அனைத்து வஸ்துக்களையும் அவனது குத்ரத் கரங்களிடம் ஒப்படைக்கின்றான். மேலும், ஒவ்வொரு வஸ்திலுமிருக்கும் ரஹ்மத்தின் சுவடுகளை அறிந்து உண்மையான ஈமானையும் தூய்மையான தவ்ஹீதையும் இறை நன்றியூடாகப் பிரகடனம் செய்கின்றான்.

பொடுபோக்குக்கார மனிதன் அருட்கொடைகளை நிராகரிப்பதனூடாக எப்படிப்பட்ட அழிவில் வீழ்ந்திருக்கின்றான் என்பதற்கான பல்வேறு அத்தாட்சிகளுள் ஒன்றை மட்டும் இவ்விடத்தில் கூறுகிறோம். அது பின்வருமாறு:

மனிதன் சுவைமிக்க ஓர் அருள் ஆகாரத்தை உண்ணும் போது, நன்றி கூறினால், அவன் உட்கொண்ட அந்த அருள் ஆகாரம் ஓர் ஒளியாகவும் மறுமைக்கான ஒரு சுவனக் கனியாகவும் மாறி விடும். அதிலுள்ள சுவையும் கூட, அல்லாஹ்வின் கருணையினதும் அரவணைப்பினதும் விளைவினாலாகும் என்பதைச் சிந்திப்பதினூடாக விசாலமானதும் நித்தியமானதுமான இனியதோர் இன்பமாக மாறி விடுகின்றது. அதாவது, ஆன்மீகஞ் சார் கூறுகளும் சாரமும் உன்னதமான அந்தஸ்துக்களுக்கு உயர்த்தப்பட்டு, உடலியல் சார்ந்த சாமான்யமான சக்கைகள், அதாவது தமது பணியை முடித்து விட்ட, இனிமேல் அவசியப்படாத கூறுகள் கழிவாக மாறி மூலத்தை நோக்கிச் சென்று விடும். அதாவது, மூலக் கூறுகளாக நிலை மாற்றமடைவதற்காகச் சென்று விடும். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தாத போது அந்தத் தற்காலிகச் சுவையானது, விரைவாக மறைந்து விடுவதால் வேதனையையும் கவலையையும் விட்டுச் செல்வதோடு தன்னளவில் கூட அழுக்குகளாக மாறி விடும். வைர அந்தஸ்தைக்கொண்ட அந்த அருள் கரிக்கட்டையாகத் திரிபடைந்து விடும். ஆனால், நன்றி காரணமாக குறுகிய தற்காலிக அருட்கொடைகள், நிரந்தர இன்பங்களையும் நித்திய கனிகளையும் பெற்றுத் தரும். நன்றியை விட்டும் தூரமான அருட்கொடைகள் மிகவும் அழகிய தோற்றத்திலிருந்து மிகவும் அசிங்கமான தோற்றத்திற்கு நிலை மாறி விடும். ஏனெனில், அந்தப் பொடுபோக்குக்காரனின் பார்வையில் குறுகிய, தற்காலிக ஒரு சுவைக்குப் பிறகு எஞ்சுவது வெறுமனே கழிவாகும்.

ஆம்! ரிஸ்கில் காதல் கொள்ளத் தகுதியான ஒரு தோற்றம் இருக்கின்றது. அந்தத் தோற்றமானது இறை நன்றியூடாகப் பிரகாசிக்கும். இல்லாவிட்டால் பொடுபோக்குக்காரர்கள், வழிதவறியவர்களிடம்

காணப்படும் ஆகாரங்கள் மீதான காதலானது மிருகத்தனமாகும். மேலும், இவ்வாறு ஒப்பீடு செய்வீர்களானால் பொடுபோக்குக்காரர்களும் வழிதவறியவர்களும் எப்படிப்பட்ட அழிவில் இருக்கின்றார்கள் என்பதை இன்னுமின்னும் கண்டு கொள்வீர்கள்.

உயிரினங்களுக்கு மத்தியில் மிக அதிகமாக(ன) ரிஸ்க் வகைகள் மீது தேவை உடையவனாக மனிதன் இருக்கின்றான். சர்வ வல்லோன் அல்லாஹ், மனிதனை, தனது அத்தனை நாமங்களுக்குமான உள்ளடக்கமான ஒரு கண்ணாடியாகவும் அனைத்து விதமான ரஹ்மத்துடைய கருவூலங்களில் காணப்படும் ஐஸ்வர்யங்களையும் அறிந்து, அளந்து, அனுபவிக்க முடியுமான அவயவங்களால் அலங்கரிக்கப்பட்ட இறை வல்லமையின் ஓர் அற்புதமாகவும் அத்தனை இறை நாமங்களினதும் பிரதிபலிப்புக்கள் மற்றும் கலைநுணுக்கங்களை மதிப்பிட்டு அளக்கக் கூடிய அங்க அவயங்களின் மொத்தமாகவும் ஆனதொரு தோற்றத்தில் பூமிப் பந்தின் மீது தனது கலீபாவாகப் படைத்துள்ளான். இதன் காரணமாக எல்லையற்ற தேவைகளைக் கொடுத்து ஆன்மீக மற்றும் லௌகீக ரிஸ்குகளின் எண்ணற்ற வகைகளின் மீது தேவை கொண்டவனாக ஆக்கினான். இப்படிப்பட்ட உள்ளடக்கங்களின் மொத்தமான மனிதனை அதி உன்னத அந்தஸ்தான "அஹ்ஸன தக்வீம்"இற்கு உயர்த்தக் கூடிய ஊடகம் இறை நன்றியாகும். இறை நன்றி இல்லாவிட்டால் "அஸ்.்.பல ஸா.்.பிலீன்" என்ற அதல பாதாளத்தை நோக்கி வீழ்வான்; மிகப் பெரிய அநியாயக்காரனாக மாறி விடுவான்.

சுருக்கமாக: நன்றியானது உபூதிய்யத்திற்கான பாதையின் அடிப்படையும் மஹ்பூபிய்யத் என்ற இறைகாதலிற்கான பாதையின் நான்கு அடிப்படைகளுள் அதி சிரேஷ்டமானதுமாகும். அந்த நான்கு அடிப்படைகளும் பின்வருமாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. "இறைகாதலிற்கான பாதையான தரீக்கதுல் அஜ்ஸில் செல்வதற்குத் தேவையான நான்கு அடிப்படைகள்: பரிபூரண இயலாமை, பரிபூரண வறுமை, பரிபூரண ஊக்கம், பரிபூரண இறை நன்றி என்பனவாகும் ஞானியே!"

اَللّٰهُمَّ اجْعَلْنَا مِنَ الشَّاكِرِينَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِينَ * سُبْحَانَكَ لاَ عِلْمَ لَنَا اِلاَّ مَاعَلَّمْتَنَا اِنَّكَ اَنْتَ الْعَلِيمُ الْحَكِيمُ * اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ سَيِّدِ الشَّاكِرِينَ وَالْحَامِدِينَ وَعَلٰى اٰلِهِ وَصَحْبِهِ اَجْمَعِينَ. اٰمِينَ * وَاٰخِرُ دَعْوٰيهُمْ اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ

بِاسْمِهِ سُبْحَانَهُ

## ரிஸாலே-இ நூர் தொகுப்பின் இருபத்தி ஒன்பதாவது மின்னலிலிருந்து இரண்டாவது வாயில்

(இந்த இரண்டாவது வாயில் ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’ பற்றியதாகும்.)

[இரண்டாவது வாயிலான இந்தச் சிறு ஏட்டில் ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’ என்ற வார்த்தையை மனிதர்களுக்குச் சொல்ல வைக்கும் ஈமானுடைய எண்ணற்ற நன்மைகள் மற்றும் ஒளியிலிருந்து ஒன்பது நன்மைகள் மாத்திரம் தெளிவுபடுத்தப்படும்.]

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ

**முதலாவது குறிப்பு:** முதலில் இரண்டு விடயங்கள் நினைவூட்டப்பட வேண்டும்.

**1-** தத்துவமானது அனைத்துப் பொருட்களையும் அவலட்சணமாகவும் பயங்கரமானதாகவும் காட்டும் ஓர் இருண்ட கண்ணாடியாகும். ஈமான் ஆனது, அனைத்தையும் அழகானதாகவும் அன்னியோன்யமானதாகவும் காட்டும் ஊடுபுகவிடக் கூடிய ஒளிமயமானதொரு கண்ணாடியாகும்.

**2-**அனைத்துப் படைப்பினங்களோடும் சகவாசம் கொண்ட, அனைத்தோடும் ஒரு வகை கொடுக்கல் வாங்கல் புரியும் தேவையுடைய, தன்னைச் சூழ உள்ள வஸ்துக்களோடு உடல் உள ரீதியாக சந்தித்துக்கொள்ளவும், பேசிக்கொள்ளவும் பரஸ்பரம் உறவு கொண்டாடவும் படைப்பளவில் நிர்ப்பந்தமான மனிதனின் வலது, இடது, முன், பின், மேல், கீழ் என்ற ஆறு நிலைப்பார்வைகள் காணப்படுகின்றன.

மனிதன் மேற் கூறப்பட்ட இரண்டு வகைக் கண்ணாடிகளையும் மாட்டிக் கொள்வதனூடாக மேற்படி ஆறு திசைகளிலும் காணப்படும் படைப்பினங்களையும் அவற்றின் நிலவரங்களையும் அவதானிக்க முடியும்.

**வலது புறம்** – இதனால் குறிப்பிடப்படுவது இறந்த காலமாகும். இதற்கமைய தத்துவக் கண்ணாடியூடாக வலது புறத்தைப் பார்த்தால், கடந்தகால தேசத்தை, இறுதிப் பேரழிவு நிகழ்ந்து தலைகீழாகப் புரண்ட, இருண்ட, பயங்கரமானதொரு மயான வெளியாகக் கண்டு கொள்வான். இதன் காரணமாக மனிதன் பயங்கரமானதோர் ஆதங்கத்துக்கும் விரக்திக்கும் ஆட்படுவதை விட்டும் பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால், ஈமானியக் கண்ணாடியை அணிந்து கொண்டு வலது புறத்தைப் பார்த்தால், உண்மையிலேயே அந்தக் கடந்தகால தேசத்தைத் தலைகீழாகப் புரண்டு அழிந்த நிலையில் கண்டு கொண்டாலும் கூட, அங்கே உயிர்கள் அழிந்து போகாதிருப்பதை அவன் கண்டு கொள்வான். அங்கிருந்த குடியிருப்பாளர்களும் முன்னோர்களும் அதைவிட அழகான, ஒளிமயமான ஒரு தேசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை அவன் விளங்கிக்கொள்வான். அங்குள்ள மண்ணறைகளை ஒளிமயமான ஓர் உலகிற்குச் செல்வதற்கான நிலக்கீழ் சுரங்க வாயில்களாகக் காண்பான். ஆக, ஈமானிய அருள் மனிதனுக்கு வழங்கும் இந்த மகிழ்ச்சிக்காகவும் நிம்மதிக்காகவும் ஆறுதலுக்காகவும் மனத்திருப்திக்காகவும் அந்த அல்லாஹ் ஒருவனுக்கே ஆயிரம் ஆயிரம் புகழ்கள் உண்டாகட்டுமாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’.

**இடது புறம்** – அதாவது எதிர் காலத்தை தத்துவவியல் கண்ணாடியினூடாகப் பார்த்தால், அங்கே எம்மை அரித்து, மண்ணோடு மண்ணாக்கி, புழுபூச்சிகளுக்கும் விஷஜந்துகளுக்கும் இரையாக்கக் கூடிய இருண்ட, பயங்கரமான, பாரியதொரு மண்ணறையைக் கண்டு கொள்வான். ஆனால், ஈமானியக் கண்ணாடியினூடாகப் பார்த்தால் ஹா(ே)லிக், ரஹ்மான், ரஹீம் ஆகிய வல்லோன் அல்லாஹ்வால் மனிதர்களுக்காகத் தயார்படுத்தப்பட்ட வகை வகையான அறுசுவை உணவுகளாலும் பானங்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஓர் அருள்பாலிக்கப்பட்ட உணவு விரிப்பாக அதனைக் கண்டு கொள்வான். எதிர்காலத்தை இவ்வாறு அலங்கரிக்கின்ற ஈமானிய அருளுக்காக அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’.

**மேற் புறம்** – அதாவது, வானவெளியை நோக்கி தத்துவப் பார்வையைச் செலுத்தும் மனிதன், இந்த எல்லையில்லா இடைவெளியில் பில்லியன் கணக்கான நட்சத்திரங்களும் கோல்களும் அங்குமிங்குமாக பயங்கர வேகத்தில் இயங்குவதைக் கண்டு பாரிய பீதிக்கும் நடுக்கத்துக்கும் ஆளாவான். ஆனால், ஈமானிய மனிதன் பார்த்தால், அந்த வியக்கத்தக்க, விசித்திரமான நிகழ்வுகள் ஒரு தளபதியின் கட்டளைக்கிணங்க அவனது மேற்பார்வையின் கீழ் இடம்பெறுகிறது என்பதையும் வானலோகத்தை அலங்கரித்திருக்கும் அந்த நட்சத்திரங்கள் யாவும் எமக்காக எரியும் ஒளிச்சுடர்கள் என்பதையும் அறிந்து கொள்வான். அவற்றின் அசுர இயக்கத்தின் காரணமாக பீதிக்கும் நடுக்கத்துக்கும் ஆட்படுவதை விட்டு விட்டு ஒரு வகை பரஸ்பர நேசத்தையும் நெருக்கத்தையும் உணர்வான். ஆகாய வெளியை இவ்வாறு திரையிடும் ஈமானிய அருளுக்காக அந்த றப்புல் ஆலமீன் ஆகிய அல்லாஹ் ஒருவன் மீதே வான்பொருட்களின் எண்ணிக்கையளவு புகழ்களும் ஹம்த்களும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’.

**கீழ்ப்புறம்** – அதாவது பூலோகத்தைத் தத்துவவியல் கண்ணாடியினூடாகப் பார்க்கும் மனிதன், அதைத் திக்குத் தெரியாது சூரியனைச் சுற்றி வரும் கடிவாளமற்ற ஒரு மிருகம் போன்று அல்லது சமுத்திரத்தில் தத்தளிக்கும் பழுதடைந்த ஒரு வள்ளம் போன்று கண்டுகொண்டு அச்சத்துக்கும் நடுக்கத்துக்கும் உள்ளாவான். ஆனால், ஈமானியக் கண்ணாடியால் பார்ப்பவன் பூமியை ரஹ்மானுடைய ஒரு கப்பலாக அதாவது அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க வித விதமான உணவுகள், பானங்கள், ஆடையணிகள் என்று அனைத்தையுமே சுமந்து கொண்டு மனித குலத்தை பிரபஞ்ச வெளியில் சுற்றுலா அழைத்துச் செல்லும் ஒரு கப்பல் வடிவில் கண்டு கொள்வான். ஈமானிய அருள் காரணமாக அடைந்துகொண்ட இந்த இன்ப அருளிற்காகவும் அந்த அல்லாஹ் ஒருவன் மீதே பெரும் பெரும் புகழ்கள் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’.

**முன் புறம்** – தத்துவவியல் ஞானியான ஒருவனின் இந்தத் திசையை நோக்கிய பார்வையில், மனிதனாகட்டும் மிருகங்களாகட்டும் அனைத்து உயிருள்ள படைப்பினங்களும் கூட்டம் கூட்டமாக அந்தத் திசையை நோக்கி அசுர வேகத்தில் சென்று மறைந்து விடுகின்றன. அதாவது, சூன்யத்தை அடைகின்றன; அழிந்து போய் விடுகின்றன. தானும் கூட அந்தப் பாதையின் பாதசாரி என்பதால் மனிதன் விரக்தியால் பேதலிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான். ஆனால், ஈமானிய நோக்கில் பார்க்கும் ஒரு மு∴மினின் பார்வையில் அந்தத் திசை நோக்கிய பயணமானது சூன்யத்தை நோக்கிய பயணமன்றி, தேசாந்திரப் பயணிகள் போன்று ஒரு சோலை நிலத்திலிருந்து இன்னுமொரு சோலை நிலத்தை அல்லது நந்தவனத்தை நோக்கிய பயணமாகும்; தற்காலிக வீட்டிலிருந்து நித்திய மாளிகையை நோக்கிய, விளைநிலத்திலிருந்து ஊதியம் பெறும் இடத்தை நோக்கிய, கவலைகள் தேசத்திலிருந்து கருணையின் தேசத்தை நோக்கியதொரு பயணமாகும். ஆகையால், அந்தத் திசையில் சூன்யமும் அழிவும் கிடையாது என்பதை அறிந்து, அந்தத் திசையில் அவன் நிம்மதியாகப் பயணிப்பான். இந்தத் திசையை இவ்வாறு ஒளிமயமாக்கும் ஈமானிய அருளுக்காக அந்த ஈருலக அரசனான அல்லாஹ் ஒருவன் மீது கோடான கோடி புகழ்களும் ஹம்த்களும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ’’. மேலும் அந்த மு∴மினின் பார்வைக்கு பாதைவழியில் தென்படும் மரணம், மண்ணறை போன்ற கஷ்டங்கள் கூட அவற்றின் விளைவுகளின் அடிப்படையில் நிம்மதியாகும். ஏனெனில், ஒளிமயமான உலகங்களை நோக்கிய பாதை மண்ணறையைத் தாண்டிச் செல்கின்றது. மிகப் பெரிய இன்பங்கள், நிம்மதிகள் மிகப் பெரிய வேதனைகளின் அழிவுகளின் விளைவுகளாகும். உதாரணமாக, யூஸு∴ப் (அலை) அவர்கள் எகிப்தின் அரியாசனம் போன்றதொரு நிம்மதியை, தனது சகோதரர்களால் கைவிடப்பட்ட படுகுழி என்ற பாதையில் ஸுலைஹாவின் அவதூறு காரணமாக அடைக்கப்பட்ட சிறைச்சாலை வாயிலைக் கடந்து அடைந்து கொண்டார். அதே போன்றே தாயின் கருவறையிலிருந்து உலகுக்கு வரும் பாலகன், பெருங்குடல் என்ற சுரங்கத்தில் படும் நெருக்கடியான அவஸ்தையின் பிரதிபலனாக உலக மாளிகையில் நிம்மதியை அடைந்து கொள்கின்றான்.

**பின் புறம்** – பின்புறமிருந்து வருபவர்களை தத்துவவியல் கண்ணாடியூடாகப் பார்க்கும் ஒருவன், ‘‘சாபமே! இவை எங்கிருந்து வந்து எங்கே செல்கின்றன? எந்த நோக்கத்துக்காக இந்த உலகத்திற்கு வருகின்றன?’’ போன்ற மிகப் பெரிய கேள்விகளுக்கான பதில்களை அறிந்து கொள்ளாமையினால் -இயல்பிற்கிணங்க- வியப்புக் கலந்த சங்கடத்தோடும் மயக்கத்தோடும் இவற்றிலிருந்து வெளிப்படும் ஒரு வகை வேதனையோடும் வாழ்க்கையைக் கழிப்பான்.

ஆனால், ஈமானிய ஒளி என்ற கண்ணாடியை அணிந்து கொண்டால், மனிதர்கள், பிரபஞ்சக் காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆச்சரியத்துக்குரிய வியத்தகு வல்லமையின்

அற்புதங்களைக் கண்டு களித்து, ஆராய்ந்து, அறிவு பெறுவதற்காக நித்திய அரசனால் அனுப்பப்பட்ட பார்வையாளர்கள், ஆய்வாளர்கள் என்பதை அறிந்து கொள்வான். மேலும் இவர்கள், அந்த உன்னத அற்புதங்களின் பெறுமதியையும் படித்தரங்களையும் அறிந்து, இவை அந்த நித்திய அரசனின் பேராற்றலுக்கான சான்றுகள் என்ற வகையில் அதனூடாக அவனை அறிந்து கொள்கின்ற அளவுக்கு அந்தஸ்துக்களைப் பெற்றுக் கொண்டு மீண்டும் நித்திய அரசனின் பிறிதொரு உலகிற்குச் செல்ல வந்தவர்கள் என்பதை அறிந்து கொள்வான். இந்தப் புரிதலை வழங்கிய ஈமானிய அருளுக்காக அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!''அல்ஹம்துலில்லாஹ்''.

**நினைவூட்டல்:** மேற்படி இருள்களை அகற்றும் ஈமானிய அருளுக்காக மொழியப்படும் ''அல்ஹம்துலில்லாஹ்'' என்ற அருளுக்காகவும் அல்லாஹ்வின் மீது புகழ் உண்டாவதாக! ''அல்ஹம்துலில்லாஹ்''. ஏனெனில். ''அல்ஹம்துலில்லாஹ்'' என்ற ஹம்த் கூட தன்னளவில் ஓர் அருள் என்பதால், அதற்காகவும் இன்னுமொரு ஹம்த் அவசியமானதாகும். இந்த இரண்டாவது நன்றிக்கும் மூன்றாவது ஒரு நன்றி, மூன்றாவதிற்கு நான்காவது ஒரு ஹம்த் அவசியமாகும். وَهَلُمَّ جَرًّا , அதாவது, தனி ஒரு ஹம்திலிருந்து வெளிப்படும் ஹம்த்களிலிருந்து முடிவற்ற சங்கிலித் தொடரான ஹம்த்கள் பிறக்கின்றன.

**இரண்டாவது குறிப்பு:** ஆறு திசைகளையும் ஒளிமயமானதாக ஆக்கும் ஈமானிய அருளுக்காக மீண்டுமொருமுறை அந்த அல்லாஹ் ஒருவனுக்கே புகழனைத்தும் உண்டாவதாக! ''அல்ஹம்துலில்லாஹ்''. ஏனெனில், ஈமான் ஆறு திசைகளிலும் சூழ்ந்த இருளை அகற்றுவதனூடாக ''விமோசனம்'' என்ற வகையில் பெரியதோர் அருளாக இருப்பது போன்றே -இயல்பாகவே- அந்த ஆறு திசைகளையும் ஒளிமயமாக்கிய காரணத்தினால் ''சுபீட்சத்தை வரவழைத்தது'' என்ற வகையில் இரண்டாவது பெரியதொரு அருளாகும். ஆகையால், மனிதன் இயல்பிலேயே நாகரிகப் பிரியன் என்ற வகையில், அந்த ஆறு திசையிலுமுள்ள படைப்பினங்களோடு தொடர்பு கொள்ள வேண்டி இருப்பதால் ஈமானிய அருளைக் கொண்டு அந்த ஆறு திசைகளிலிருந்தும் பயன் பெற்றுக் கொள்ள முடியும்.

அதே போன்றே [iii] فَأَيْنَمَا تُوَلُّوا فَثَمَّ وَجْهُ اللهِ என்ற வசனத்தின் சாடை அர்த்தத்தின் ஊடாக ஆறு திசைகளில் எதுவானாலும் ஆகட்டும். அதில் மு.்.மின் பிரகாசமிக்கவனாக மாறுவான். ஏன், மு.்.மினான ஒரு மனிதனுக்கு உலகின் ஸ்தாபிப்பிலிருந்து முடிவு வரை நீளுகின்ற ஓர் ஆன்மீக ஆயுள் இருக்கின்றது. மேலும், அவனது இந்த ஆன்மீக ஆயுளானது ஆதி அந்தமில்லாத ஒரு ஹயாத்துடைய ஒளியிலிருந்து நம்பிக்கையும் உதவியும் பெற்றுக் கொள்கின்றது.

மேலும், இவ்வாறே ஆறு திசைகளையும் ஒளியூட்டும் ஈமான் வாயிலாக மனிதனுடைய இந்தக் குறுகிய இடமும் காலமும் மிகவும் விசாலமான ஓர் உலகமாக நிலை மாற்றமடையும். இந்த உலகம் அவனுடைய மாளிகையாக மாறி விடும். இறந்த மற்றும் எதிர் காலங்கள் மனித ஆன்மாவுக்கும் இதயத்துக்கும் நிகழ்காலம் போன்றாகி இடையே உள்ள தூரம் மறைந்து விடும்.

**மூன்றாவது குறிப்பு:** ஈமான் ஓர் ஆதாரத்தளமாகவும் உதவித்தளமாகவும் இருப்பதால் அதற்காகவும் அந்த சர்வ வல்லோனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே முடிவற்ற நன்றிகளும் புகழும் உண்டாவதாக!''அல்ஹம்துலில்லாஹ்''. ஆம்! மனிதன் எல்லையற்ற இயலாமையுடையவனாக இருப்பதுடன் கூடவே ஏராளமான எதிரிகளால் சூழப்பட்டவனாகவும் இருக்கின்ற காரணத்தினால் அவற்றை எதிர்கொள்வதற்குப் பக்கபலமாக இருக்கக் கூடியதோர் **ஆதாரத்தளத்தின்** மீது தேவையுடையோனாக இருக்கின்றான். அவ்வாறே, எண்ணற்ற தேவைகளை உடையவனாக இருக்கின்ற அதே நேரம், முடிவற்ற பலவீனனாகவும் அவன் இருக்கின்ற காரணத்தினால் அந்தத் தேவைகளைக் களைவதற்கு உதவியாக இருக்கக் கூடிய ஓர் **உதவித்தளத்தின்** மீதும் தேவை உடையவனாக இருக்கின்றான்.

மனிதனே! உனக்கான முதலும் இறுதியுமான ஆதாரத்தளம் அல்லாஹ் மீதான ஈமானாகும். அதேபோன்று உனது ஆன்மாவுக்கும் மனசாட்சிக்குமான ஒரே உதவித்தளம் மறுமை

---

[iii] பகரா-115

நம்பிக்கையாகும். இந்த இரண்டு தளங்களையும் அறிந்து கொள்ளாத ஒரு மனிதனின் உள்ளமும் ஆன்மாவும் அச்சத்தால் உறையும். அவனது மனசாட்சி அவனை எப்போதுமே வதைக்கு மேல் வதைப்படுத்தும். ஆனால், முதல் தளத்தை ஆதாரமாகவும் இரண்டாவது தளத்தை உதவியாகவும் எடுத்துக் கொள்ளும் மனிதன் உள ரீதியாகவும் ஆத்ம ரீதியாகவும் ஏராளமான இன்பங்களையும், நிம்மதிகளையும் உணர்ந்து கொள்வான். மிகுந்த ஆறுதலடைந்தவனாகவும் முத்மஈன் ஆகவும் ஆகிவிடுவான்.

**நான்காவது குறிப்பு:** ஆகுமாக்கப்பட்ட இன்பங்கள் தீர்ந்து போக ஆரம்பமாகும் போது அது மனிதனுக்கு கைசேதத்தையும் துக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. இந்த கைசேதத்தையும் துக்கத்தையும், மேற்படி இன்பங்களின் தொடர்ச்சி எதிர் வந்துகொண்டிருக்கின்றது என்பதைக் காட்டி அத்தாட்சிப் படுத்துவதனூடாகவும் அந்த அருட்கொடைகள் தொடர்ந்து வருவதால் குறைந்தோ அழிந்தோ விடாது என்பதை அந்த அருட்கொடைகளின் தோற்றுவாயாக இருக்கின்ற அவற்றின் வற்றாத ஊற்றுக்களை காட்டி உத்தரவாதப் படுத்துவதனூடாகவும் அகற்றி விடுகின்ற ஈமானிய ஒளிக்காகவும் அந்த மகா கருணையாளனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே கோடானுகோடி நன்றிகளும் புகழும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’.

அதே போன்று ஈமானிய ஒளி பிரிவின் காரணமாக ஏற்படும் துக்கங்களை, அதற்கொப்பான புதுப்பிக்கப்படும் இன்பங்களைக் காட்டுவதனூடாக அகற்றி விடுகின்றது. அதாவது தீர்ந்து, அழிந்து போவதை சிந்திப்பதனூடாக ஒவ்வோர் இன்பத்தினுள்ளும் ஏராளமான வேதனைகள் இடம்பிடித்துக் கொள்கின்றன. ஈமானிய ஒளியானது புதுப்பிக்கப்படும் அதை ஒத்த இன்பங்களைக் காட்டுவதனூடாக இன்பங்களோடு ஒட்டியிருக்கும் அந்த வேதனைகளைத் துடைத்தெறிந்து விடுகின்றது. இதனோடு கூடவே இன்பங்கள் புதுப்பிக்கப்படுவதிலும் கூட அலாதியான ஓர் இன்பம் இருக்கின்றது. ஆம்! ஒரு கனி, அதன் மரம் இல்லாததாக இருந்திருப்பின், அந்தக் கனிக்குள் சுருங்கிய அதன் சுவை, அதைச் சாப்பிட்ட உடனே தீர்ந்து போய் விடும். அந்த அழிவு கைசேதத்தையும் துக்கத்தையுமே விளைவாகத் தரும். ஆனால், அந்தக் கனியின் மரம் அறியப்படுகின்ற போது, அந்தக் கனியின் முடிவோடு வேதனை ஏற்படுவதில்லை. ஏனெனில், அந்த இடம் அதை ஒத்த ஏராளமான கனிகளைக் கொண்டு மீள நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மனிதன் அறிந்து கொள்கிறான். ஆகவே, புதுப்பித்தல் செயற்பாடானது தன்னளவில் இன்பம் நிறைந்ததாகும்.

அதே போன்றே மனித ஆன்மாவை மிக மோசமாக வதைப்படுத்துவது பிரிவால் ஏற்படும் வேதனைகளாகும். ஈமானிய ஒளியானது அந்த வேதனைகளைப் புதுப்பிக்கப்படும் ஒத்த இன்பங்களைக் காட்டுவதனூடாகவும் மீளிணையப் போகின்றீர்கள் என்ற நன்மாராயத்தின் ஊடாகவும் போக்கி விடுகின்றது.

**ஐந்தாவது குறிப்பு:** மனிதன், படைப்பினங்களில் தனக்கு எதிரிகளாகவும் அன்னியர்களாகவும் அல்லது உயிரற்ற சடலங்களைப் போன்று மரணித்தவைகளாகவும் அநாதரவானவைகளாகவும் திக்குத் தெரியாதவைகளாகவும் சித்திரித்துக்கொண்ட வஸ்துக்களை, நேசத்துக்குறிய சகோதரர்கள், சகபாடிகளைப் போன்றும் திக்ரிலும் தஸ்பீஹிலும் திளைத்திருக்கின்ற உயிருள்ள இறை தியானிகளாகவும் காட்டுகின்ற ஈமானிய ஒளிக்காக அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’. அதாவது, பொடுபோக்குக் காரனின் பார்வையில் படைப்பினங்கள், தனக்குத் தீங்கிழைக்கக் கூடிய எதிரிகளைப் போன்றே தென்படும். இதனால் பீதியும் அச்சமும் அடைவான். அதேபோன்றே வழிகேட்டிலுள்ளவன் வஸ்துக்களை அன்னியமானவையாகப் பார்ப்பான். ஏனெனில், வழிகேட்டில் உள்ளவர்களின் பார்வையில் இறந்த மற்றும் எதிர்காலங்களிலுள்ள வஸ்துக்களோடு சகோதரத்துவ உறவுகளோ, பிணைப்புக்களோ, இணைப்புக்களோ கிடையாது. வெறுமனே நிகழ்கால வஸ்துக்களோடு குறுகிய, சிறியதொரு தொடர்பு காணப்படும். இதன் காரணமாக, வழிகேட்டிலுள்ளவர்களுக்குப் பிறிதொன்றோடுள்ள சகோதரத்துவமும், நேசமும் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் மிக நீண்டதொரு காலப் பரப்பிலுள்ள ஒரு நிமிடத்தை ஒத்ததாகும்.

ஈமானியப் பார்வையானது, பிரமாண்டமான வான்பொருட்களையும் கூட உயிர்ப்புள்ளவையாகவும் ஒன்றோடொன்று அன்னியோன்யமானவையாகவும் பின்னிப் பிணைந்தவையாகவும் கண்டு கொள்ளும். மேலும், ஒவ்வொரு வான்பொருளும் தத்தமது மெய்மொழிகளால் படைப்பாளனுக்கு தஸ்பீஹ் செய்து கொண்டிருப்பதைக் காட்டித் தரும். இந்த வகையில், ஒவ்வொரு வான்பொருளினதும் தமக்கே உரிய அமைப்பில் ஒரு வகையான ஹயாத்தும் ரூஹும் காணப்படுகின்றன. ஆகவே, ஈமானியப்

பார்வையில் அந்த வான்பொருட்களுக்கிடையே குழப்ப நிலை காணப்படாது. மாறாக, அன்னியோன்யமும் அன்புப்பிணைப்புமே காணப்படும்.

வழிபிறழ்ந்த பார்வையானது, தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத, இயலாமையின் மொத்த உருவான மனிதனைக் கேட்பார் பார்ப்பாரற்ற, பாதுகாப்பற்றவர்களாகவும் துக்கம், துயரம், இயலாமை காரணமாக அழுது புலம்பும் அனாதரவானவர்களாகவும் கண்டு கொள்ளும். ஈமானியப் பார்வையானது உயிரினங்களை அழுது புலம்பும் அநாதரவானவைகளைப் போலன்றி பொறுப்பு சுமத்தப்பட்ட பணியாளர்களாகவும் தியானத்தில் ஈடுபடும் அடியார்களாகவும் காட்டும்.

**ஆறாவது குறிப்பு:** இம்மை மற்றும் மறுமை உலகங்களை விதவிதமான அருள்பாக்கியங்களைத் தாங்கிய இருவேறு அருள் விரிப்புக்களாகப் பிரஸ்தாபிக்கின்ற ஈமானிய ஒளிக்காக நிகரற்ற அன்புடையோனாகிய அந்த அல்லாஹ் ஒருவனுக்கே புகழனைத்தும். ஆம்! மு.்.மினான எந்த ஒருவனும் தனது ஈமானியக் கரத்தினாலும் கிரகித்துக் கொள்ள முடியுமான, முடியாத புலனுணர்வுகளாலும், உளரீதியான மற்றும் ஆத்மார்த்த அவயவங்களினூடாகவும் அந்த அருள் விரிப்புக்களிலிருந்து பயன் பெற்று இன்பம் அனுபவிப்பான். வழிபிறழ்ந்த பார்வையிலோ உயிரினங்களின் பயன்பெற முடியுமான எல்லை குறுகி விடுகின்றது; லௌகீக இன்பங்களோடு சுருங்கிக் கொள்கின்றது. ஈமானியப் பார்வையில் இந்த எல்லையானது, வானம் பூமியை உள்ளடக்கக் கூடிய அளவும் இம்மை மறுமை உலகங்களை உள்ளடக்கக் கூடிய அளவும் விசாலமானதாகும். ஆம்! ஒரு மு.்.மின், சூரியனைத் தனது இல்லத்தின் முகட்டில் பொருத்தப்பட்ட ஓர் ஒளி விளக்காகவும் சந்திரனை ஓர் அலங்கார விளக்காகவும் பார்க்க முடியும். இந்த வகையில் சூரியனும் சந்திரனும் தனக்கான ஒவ்வோர் அருளாக ஆகி விடுகின்றது. இவ்வாறு மு.்.மினான மனிதனின் பயன்பெறும் எல்லை வானம் பூமியை விட விசாலமானதாகும். அற்புதக் குர்ஆன் وَسَخَّرَ لَكُمُ الشَّمْسَ وَالْقَمَرَ * سَخَّرَ لَكُمْ مَا فِى الأَرْضِ [iv] என்ற வசனங்களின் ஆழமான கருத்தைக் கொண்டு ஈமானிலிருந்து ஊற்றெடுக்கும் மேற்படி அருட்கொடைகளையும் செல்வங்களையும் சுட்டிக் காட்டுகின்றது.

**ஏழாவது குறிப்பு:** எல்லையில்லாத வகை வகையான அருட் பாக்கியங்களையும் முடிவேயில்லாத விதவிதமான சௌபாக்கியங்களையும் அளவிடமுடியாத வகை வகையான அருட்கொடைகளையும் பரிபூரணமாக உள்ளடக்கிய அனைத்து விதமான அருட்கொடைகளுக்குமான ஊற்றுவாயாக இருப்பதோடு மட்டுமன்றி, இவ்வனைத்து அருட்கொடைகளையும் விஞ்சியதாகவும் இருக்கின்ற வாஜிபுல் வுஜூத் ஆகிய அந்த அல்லாஹ், இருக்கின்றான் என்பதற்காக, பிரபஞ்சத்திலுள்ள அணுக்களின் எண்ணிக்கையளவு அந்த சர்வலோக இரட்சகனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே புகழனைத்தும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’. இந்த அருள் சம்பந்தமான குறிப்புக்கள் ரஸாஇலுன் நூரின் பல பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளன. விசேடமாக ஈமான் பில்லாஹ் சம்பந்தமாகப் பேசும் ரஸாஇலுன் நூரின் பாகங்கள் இந்த அருளின் தாத்பரியங்களைத் திரைகளை நீக்கி வெளிப்படுத்துகின்றது.

இறை கருணையால் ஆகர்ஷிக்கப்பட்ட ஒட்டுமொத்த உயிரினங்களினதும் எண்ணிக்கையளவு அருட்கொடைகளை தன்னகத்தே பொதியப் பெற்றுள்ள அல்லாஹ்வுடைய ரஹ்மானிய்யத் உள்ளடக்கியிருக்கின்ற அருட்கொடைகளுக்காக உயிரினங்களின் எண்ணிக்கையளவு புகழும் நன்றிகளும் மகா கருணையாளனாகிய அந்த அல்லாஹ் ஒருவனுக்கே உண்டாகட்டுமாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’. ஏனெனில், விசேடமாக மனிதன் ஏனைய அனைத்து உயிரினங்களோடும் தொடர்புபட்டவனாக இருக்கின்றான். இந்தத் தொடர்பு காரணமாக மனிதன் ஒவ்வோர் உயிரினத்தினதும் மகிழ்ச்சியினாலும் மகிழ்ச்சியடைவான்; வேதனைகளாலும் வேதனையடைவான். அவ்வாறாயின், ஏதேனும் ஒன்றிடம் காணப்படும் அருள் அதனோடு தொடர்புபட்டவர்களுக்கும் ஓர் அருளாகும்.

மேலும், தாய்க்குலத்தின் அன்பால் அருள்பாலிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையளவு அல்லாஹ்வுடைய ரஹீமிய்யத்தில் பொதியப்பெற்றிருக்கும் அருட்கொடைகளுக்காக நிகரற்ற

---

[iv] இப்ராஹீம்-33, ஹிஸ்ப்-65

அன்புடையோனாகிய அந்த அல்லாஹ் ஒருவனுக்கே புகழனைத்தும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’. ஆம்! தாயின் அரவணைப்பை விட்டும் தூரமான ஒரு குழந்தையின் அழுகையால் பாதிக்கப்பட்டு வேதனையடையும் ஒவ்வொரு மனசாட்சி உடையவனும், நிச்சயமாக தாயின் குழந்தை மீதுள்ள பாசம் காரணமாக இன்பமும் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைவான். ஆக, இது போன்ற இன்பங்கள் அனைத்தும் புகழையும் நன்றியையும் வேண்டி நிற்கின்ற ஒவ்வோர் அருளாகும்.

மேலும், அல்லாஹ்வுடைய ஹகீமிய்யத் உள்ளடக்கியிருக்கின்ற அருட்கொடைகளுக்காக பிரபஞ்சமெங்கும் வியாபித்து கோலோச்சியிருக்கின்ற வித விதமான நுண்ணிய ஞானங்களின் எண்ணிக்கையளவு புகழும் நன்றியும் சர்வ ஞானமிக்க அந்த அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டுமாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’. ஏனெனில், மனித ந∴ப்ஸ் ரஹ்மானிய்யத்தின் பிரதிபலிப்புக்களாலும், உள்ளம் ரஹீமிய்யத்தின் பிரதிபலிப்புக்களாலும் அருள்பாலிக்கப்படுவது போன்றே, மனிதனது அறிவானது ஹகீமிய்யத்தின் நுண்ணிய பிரமாதமான பிரதிபலிப்புக்களால் இன்பமும் சுவையும் அனுபவிக்கின்றது. ஆக, இத்தகைய அருட்கொடைகளுக்காகவும் வாய் நிறைய ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’ சொல்வதனூடாக புகழும் நன்றியும் செலுத்துவது கடமையாகின்றது.

மேலும், அல்லாஹ்வுடைய ஹ∴பீழிய்யத் உள்ளடக்கியிருக்கின்ற அருட்கொடைகளுக்காக, அஸ்மாஉல் ஹுஸ்னாவில் உள்ள ‘‘வாரிஸ்’’ நாமத்தின் பிரதிபலிப்புக்கள் எண்ணிக்கையளவும், தந்தையர் போன்ற மூதாதையரின் இறப்பைத் தொடர்ந்து நிலைத்து நிற்கும் அவர்களது கிளையினராகிய வழித்தோன்றல்களின் எண்ணிக்கையளவும், மரத்தை ஒத்த அஸல்களுடைய இறப்பைத் தொடர்ந்து அவற்றின் இடத்தை நிரப்புவதற்காகப் பாதுகாக்கப்படும் ஏராளமான விதைகளின் எண்ணிக்கையளவும், மறுமை உலகின் இருப்புக்கள் எண்ணிக்கையளவும், மறுமைப் பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பாதுகாக்கப்படும் மனிதனின் செயல்கள் எண்ணிக்கையளவும் வானங்களை நிரப்பும் அளவு முழக்கத்துடன் அந்த சர்வ ஞானமிக்க பாதுகாவலனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே புகழனைத்தும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’. ஏனெனில், அருட்கொடைகளின் தொடர்ச்சி அருட்கொடைகளை விட அதிகம் பெறுமதியானதாகும். இன்பத்தின் தொடர்ச்சி, இன்பத்தை விட அதிகம் இனிமையானதாகும். சுவனத்தில் நிரந்தரம் சுவனத்தை விட சிரேஷ்டமானதாகும். இன்னும் இந்தப் பட்டியலை நீட்டிக்கொண்டே செல்லலாம். இதற்கமைய அல்லாஹ்வின் ‘‘ஹ∴பீழிய்யத்’’ உள்ளடக்கும் அருட்கொடைகள் ஒட்டுமொத்த பிரபஞ்சத்திலும் இருக்கின்ற ஒட்டுமொத்த அருட்கொடைகளை விடவும் மிக அதிகமானதும் மிக உயர்ந்ததுமாகும்.

மேலும், மேற்படி விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ‘‘ரஹ்மான், ரஹீம், ஹகீம், ஹ∴பீழ்’’ ஆகிய நாமங்களைப் போன்றே அஸ்மாஉல் ஹுஸ்னாவிலிருக்கும் ஒவ்வொரு பிற நாமமும் முடிவற்ற அருட்கொடைகளை உள்ளடக்கியதாக இருப்பதால் முடிவேயில்லாத புகழும் நன்றியும் அந்த ஏக வல்லோன் அல்லாஹ்வின் மீது உண்டாவதாக! புகழனைத்தும் அவனொருவனுக்கே! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’.

மேலும், முடிவில்லாத அருட்கொடைகளையும் சௌபாக்கியங்களையும் சுமந்து வந்த குர்ஆனுக்காகவும் அந்த அல்லாஹ்வுக்கே எல்லையில்லாத புகழும் நன்றியும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’. ஏனெனில், அந்தக் குர்ஆன் இதுவரை சொல்லப்பட்ட அனைத்து அருட்கொடைகளைப் பற்றியும் எமக்கு வியாக்கியானம் செய்கின்ற ஒரு மொழிபெயர்ப்பாளனாக இருக்கின்றது.

மேலும், கண்மணி நாயகம் ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அண்ணவர்களுக்காகவும் அல்லாஹ் ஒருவனுக்கே முடிவில்லாத நன்றியும் புகழும் உரித்தாகட்டுமாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’. ஏனெனில், இந்த வாயிலில் கூறப்பட்ட ஒட்டு மொத்த அருள் கஜானாக்களினதும் திறவுகோலாக இருக்கின்ற ஈமானிய அருளுக்கு வஸீலாவாக அண்ணவர்களே அமைந்தார்கள்.

கூடவே ஆன்மீக மற்றும் லௌகீக ரீதியான அனைத்து விதமான அருட்கொடைகளுக்குமான உள்ளடக்கமான ஊற்றாக இருக்கின்ற இஸ்லாம் என்ற நி∴மத்துக்காகவும் ஏக இரட்சகனான அல்லாஹ்வுக்கே எல்லையில்லாத புகழும் நன்றியும் உண்டாவதாக! ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’.

**எட்டாவது குறிப்பு:** புகழனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரமே உண்டாவதாக. அவனது மகத்துவம் எத்தகையதெனில், -இந்தப் பெரும் புத்தகமான பிரபஞ்சப் புத்தகத்துடைய விரிவுரையான சங்கைமிக்க குர்ஆனின் தெளிவுரைக்கமைய- பிரபஞ்சப் புத்தகத்தின் அத்தனை பாகங்களும் அத்தியாயங்களும், அத்தனை பக்கங்களும் பத்திகளும், அத்தனை வரிகளும் வார்த்தைகளும், அத்தனை எழுத்துக்களும் புள்ளிகளும் -அவற்றுக்கென்றே உள்ள தனித்துவத்தோடு அவற்றை அந்தப் புத்தகத்தில் பதித்த- அந்த சங்கை மிக்க படைப்பாளனாகிய மூதுல் அக்தஸை, அவனது ஜமால் மற்றும் கமால் என்ற பண்புகளைப் பிரதிபலிப்பதனூடாகப் புகழ்பாடி வாழ்த்திக் கொண்டிருக்கின்றன.

மேலும், அந்தப் பிரபஞ்சப் புத்தகத்தில் இருக்கின்ற சிறிதாகட்டும் பெரிதாகட்டும் அனைத்து வடிவமைப்புக்களும் ‘‘அல்வாஹிதுஸ் ஸமத்’’ ஆகிய அந்த அழகிய வடிவமைப்பாளனின் ஜலால் நாமத்திற்குரிய பண்புகளை அதனதன் தரத்துக்கேற்ப பிரதிபலிப்பதனூடாகப் புகழ்பாடி வாழ்த்திக் கொண்டிருக்கின்றன.

மேலும், அந்தப் புத்தகத்தின் நயமும் அர்த்தபுஷ்டியும் மிக்க ஒவ்வொரு சங்கீதமும், அர்ரஹ்மான், அர்ரஹீம், அல்கதீர், அல்அலீம், அல்ஹகீம், அல்அஸீஸ் ஆகிய ஒழுங்கமைப்பாளனை தூய்மைப்படுத்திக் கொண்டும் வாழ்த்திப் புகழ் பாடிக்கொண்டும் இருக்கின்றன. இவ்வாறே, அந்தப் புத்தகத்தின் ஒவ்வோர் எழுத்தும், ஒவ்வொரு புள்ளியும், ஒவ்வொரு வடிவமைப்பும் அஸ்மாஉல் ஹுஸ்னாவின் பிரதிபலிப்புக்களாகவும் அவற்றால் ஆகர்ஷிக்கப்பட்டவைகளாகவும் இருந்து கொண்டு அந்த மூதுல் அக்தஸை தூய்மைப்படுத்திக் கொண்டும் வாழ்த்திக் கொண்டும் கண்ணியப்படுத்திக் கொண்டும் இருக்கின்றன.

## ஒன்பதாவது குறிப்பு[1]

الحَمْدُ – مِنَ الله بالله عَلى الله – لله بِعَدَدِ ضَرْبِ ذَرَّاتِ الكائِنَاتِ مِنْ أوَّلِ الدُّنيَا الى آخِرِ الخِلقَةِ في عَاشِرَاتِ دَقائِقِ الأزمِنَةِ مِنَ الأزَلِ الى الأبَدِ.

الحَمْدُ لله عَلى " الحَمْدُ لله " بِدَورٍ دآئِرٍ في تَسَلسُل [1ᵛ] يَتَسَلسَلُ إلى مَالا يَتَنَاهى.

---

[1] உஸ்தாத் பதீஉஸ்ஸமான் அவர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட இந்த ஒன்பது குறிப்புக்களையும் துருக்கி மொழிக்கு மொழிபெயர்த்த உஸ்தாத் அவர்களுடைய ஒன்றுவிட்ட சகோதரரும் தலைசிறந்த ஆலிமுமான அப்துல் மஜீத் அவர்கள் இந்த ஒன்பதாவது குறிப்பை, தான் மொழிபெயர்க்காது விட்டதற்கான காரணத்தை பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ‘‘சத்தியத்துடைய இது போன்ற உன்னதமான இரகசியக் கருவூலங்களைத் திறப்பதற்கான திறவுகோல் என்னிடம் இல்லை. அத்தோடு நோன்போடு இருக்கும் என்னால் அந்த இரகசியங்களை அவிழ்க்கவும் முடியாதுள்ளது; அந்த சிகரங்களை எட்டவும் முடியாதுள்ளது. இந்த அளவைக் கூட உஸ்தாத் அவர்களுடைய ஆன்மீக உதவியைக் கொண்டும், லைலதுல் கத்ருடைய பரக்கத்தைக் கொண்டுமே மொழிபெயர்க்க முடிந்தது. மன்னித்துக் கொள்ளுங்கள்.’’

இந்த ஒன்பதாவது குறிப்பு தமிழுக்கும் மொழிபெயர்க்கப்படவில்லை, அரபியில் உள்ளவாறே விட்டுவிட்டோம். -மொழிபெயர்ப்பாளர்-

الحَمْدُ لله عَلى نِعْمَةِ القُرآنِ وَالايمَانِ عَلَيَّ وَعَلى إخوَاني بِعَدَدِ ضَرْبِ ذَرَّاتِ وُجودِي في عَاشِرَاتِ دَقَائِقِ عُمْرِي في الدُّنيا، وَبَقَائِي وبقَائِهِمْ في الآخِرَةِ.

(سُبْحَانَكَ لا عِلْمَ لَنَا إلاّ ما عَلَّمْتَنَا إنَّكَ أنتَ العَلِيمُ الحَكِيمُ)
(الحَمْدُ لله الَّذي هَدينَا لِهذا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ
لَولا أنْ هَدينَا الله لقَدْ جَاءتْ رُسُلُ رَبِّنَا بِالحَقِّ).
اللَّهُمَّ صَلِّ عَلى سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ حَسَنَاتِ أُمَّتِهِ وَعَلى آلِهِ وَصَحْبِهِ وسَلِّمْ آمينَ.
وَالحَمْدُ لله ربِّ العَالَمِينْ.

**ஐந்தாவது சொல்:**

وَلَهُ الْحَمْدُ , அதாவது நன்றியும் புகழும் வாழ்த்துக்களும் நன்றிக்கடனும் அவனுக்கு மாத்திரமேயாகும்; அவனுக்கே அருகதையுடையனவாகும். இதன் அர்த்தமானது அருட்கொடைகள் அனைத்தும் அவனுக்கே சொந்தமாகும்; அவை அவனது கஜானாவிலிருந்தே வெளிப்படுகின்றன என்பதாகும். அந்த கஜானாவோ நித்தியமானதாகும். ஆம்! இந்தச் சொல் பின்வருமாறு நன்மாராயம் கூறுகின்றது: மனிதனே! அருட்கொடைகள் முடிவடைவதை நினைத்து வேதனை அடையாதே. ஏனெனில், ரஹ்மத் கருவூலம் வற்றாததாகும். மேலும், சுவைகள் தீர்ந்து போவதை எண்ணி அந்தக் கைசேதம் காரணமாக அவலக் குரல் எழுப்பாதே. ஏனெனில், அந்த அருட் கனியானது முடிவற்ற ரஹ்மத்திலிருந்து வெளிப்படும் கனியாகும். மரம் நித்தியமானது எனில், பழம் போனாலும் பரவாயில்லை. அந்த இடம் இன்னுமொன்றைக்கொண்டு நிரப்பப்படும். அருட் பாக்கியங்களோடுள்ள இன்பங்களுக்குள் அந்த இன்பங்களை விட நூறு மடங்கு அதிகமான இன்பத்தைக் கொண்ட இறை கருணையின் அரவணைப்பை இறை நன்றியூடாகச் சிந்தித்து, இன்பத்தை ஒன்றிலிருந்து நூறு மடங்காக்கிக் கொள்ள முடியும். எவ்வாறு ஒரு கீர்த்தி மிக்க பாதுஷாஹ் உனக்கு அன்பளிப்பாக வழங்கும் ஓர் அப்பிள் பழத்தின் சுவையினுள், நூறு அல்லது ஆயிரம் அப்பிள் பழங்களின் சுவையை விட அதிகமானதோர் இன்பத்தைத் தன்னோடுள்ள நெருக்கத்தினூடாக உனக்கு உணர்த்தி அருளுகின்றார். அதே போன்றே, لَهُ الْحَمْدُ என்ற சொல்லினூடாக, அதாவது நன்றி மற்றும் புகழ் ஊடாக, இன்னொரு வகையில் சொல்வதானால் அருட்கொடைகளைப் பார்த்து

---

[1] الدور والتسلسل محالان في دائرة الممكنات. لأنهما يقتضيان عدم التناهي، ودائرة الممكنات متناهية فلاتسع غير المتناهي. اما الحمد المتعلق بدائرة الوجوب فهو غير متناهٍ. فيدخل بالدور والتسلسل في دائرة غير متناهية فيتمكن فيها وتسعه. . المؤلف.

அருள்பாலிக்கப்படுகின்றேன் என்பதை உணர்ந்து கொள்வதனூடாக, அதாவது, அருளாளனை அறிந்து கொண்டு அவனால் அருள்பாலிக்கப்படுவதைச் சிந்திப்பதனூடாக, இன்னொரு வகையில் சொல்வதானால், அவனது கருணையின் நெருக்கத்தையும் இரக்கத்தின் அரவணைப்பையும் அருட்கொடைகளின் தொடர்ச்சியையும் சிந்திப்பதனூடாக அருட்கொடைகளை விட ஆயிரம் மடங்கு அதிகமான இன்பம் நிறைந்த ஆன்மீக ரீதியான இன்பத்துக்கான கதவு உனக்காகத் திறக்கப்படும்.

கண்ணியவானே அறிந்து கொள்! சர்வ வல்லோன் அல்லாஹ் உனக்கு, சூன்யத்திலிருந்து மெய்ந்நிலையையும், அதிலும் மெய்ந்நிலையின் பல விதமான வகைகள் மற்றும் நிலைமைகளில் அதி உன்னத அந்தஸ்தான முஸ்லிம் என்ற நாமத்துடன் கூடிய மானுட அந்தஸ்தையும் வழங்கினான். உனது ஆரம்பப் புள்ளியிலிருந்து இறுதியாக அடைந்து கொண்ட தோற்றம் வரை பல்வேறு நிலைமைகள், நிகழ்வுகள், திருப்பங்கள், நகர்வுகள், தரிப்புக்கள் என அனைத்துமே உனக்குரிய அருட்கொடைகளுக்கான குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ளன. இதன்படி நீ பின்னால் விட்ட காலச் சக்கரம் வைரங்கள் போன்ற அருட்கொடைகளால் அலங்கரிக்கப்பட்ட கோவை அல்லது விதவிதமான அருட்கொடைகளுக்கான சாரம் போன்றதொரு தோற்றத்தை வழங்குகின்றது. ஆகவே, நீ பின்னால் விட்ட உடல்களின் ஒவ்வொரு தரிப்பிலும் நிலைமையிலும் திருப்பங்கள் மற்றும் நகர்வுகளிலும் ''எவ்வாறு இந்த அருளை அடைந்து கொண்டாய்? எதனூடாக அதற்கான அருகதையைப் பெற்றுக் கொண்டாய்? அதற்காக நன்றி செலுத்தினாயா?'' என்று வினவப்படுவாய். ஏனெனில், நிகழப்பெற்ற அனைத்து நிகழ்வுகளும் கேள்வி கணக்கிற்குட்பட்டதாகும். ஆனால், சாத்தியப்பாட்டில் உள்ள ஒன்று இன்னும் நிகழவில்லை எனில், அது கேள்விக் கணக்கிற்குட்பட்டதல்ல. கடந்து சென்ற நிலைமைகள், நிகழ்வுகளாகும்; எதிர்கால நிலைமைகள் சூன்யமாகும். நீ நிகழ்வுகளுக்கே பொறுப்புதாரியாவாய். சூன்யத்தில் பொறுப்புக் கிடையாது. அவ்வாறெனில், கடந்த காலத்தில் நிறைவேற்றாத நன்றிகளை கழாச் செய்வது கடமையாகும்.

ஆம்! இந்த வாழ்க்கையின் நோக்கமும் விளைவுமாக நித்திய வாழ்க்கை இருப்பது போன்றே அதன் ஒரு கனியும் கூட வாழ்வை அருளிய அருளாளனான முஹ்யீ இற்குச் செலுத்தும் நன்றியும் வணக்கமும் புகழும் அன்புமாகும். ஆக, இறை நன்றியும் இறைகாதலும் இறைவணக்கமும் இறைபுகழும் வாழ்க்கையின் கனியாக இருப்பது போன்றே பிரபஞ்சத்தின் நோக்கமுமாகும். ஆகவே இதிலிருந்து, வாழ்வின் நோக்கம் ''சொகுசாக வாழ்வதும் இன்பங்கள், ஆசைகளை மனம் போன போக்கில் அனுபவிப்பதுமாகும்'' என்று சொல்பவர்கள் எப்படிப்பட்ட அசிங்கமான ஓர் அறியாமையில் இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இவர்கள் இறை நிராகரிப்பாளர்களைப் போன்று, மிகப் பெறுமதி வாய்ந்த வாழ்க்கை அருளையும் உணர்வுகள், புத்திக் கூர்மை அறிவு போன்ற அன்பளிப்புக்களையும் மட்டந்தட்டி, அலட்சியம் செய்து அருள்பாலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதை நிராகரிக்கின்ற பயங்கரமானதொரு வழிகேட்டில் இருக்கின்றனர்.